## விசேஷக்குறிப்பு

இன்று மனிதர்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசக் காரணமென்ன? என்பதையும் அவைகள் எப்படி தோன்றின? என்பதையும் தெரிந்துகொள்ள விரும்பினால் ஆதியாகமம் 11:1-9 வரை படிக்கவும்.

# பாடம்-5

## மூன்று முற்பிதாக்கள்

## ஆபிரகாம், ஈசாக்கு, யாக்போபு

நாம் ஆதியாமத்தில் சிறந்த நபர் ஒருவரைக் குறித்து விளக்கமாகப் படிக்கப்போகின்றோம். தேவன் எப்படிப்பட்ட விசுவாசத்தை ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கின்றனர் என்பதை இவரிடமிருந்து தெரிந்து கொள்வோம்.

## ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை

விசுவாசம் தேவனுடைய வசனத்தைக் கேட்பதினால் வருகின்றது (ரோமர் 10:17) விசுவாசம் என்றால் என்ன? என்பதை ஆபிராமின் இரண்டு சம்பவங்களிலிருந்து தெரிந்து கொள்வோம். தேவன் ஆபிரகாமை அழைத்து வந்து ‘‘நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்கு போ’’ என்று கூறும்போது ஆபிரகாம் ஊர் என்னும் பட்டணத்தில் விசித்து வந்தார். தான் எங்கே? போகப்போகிறோம் என்றுக் கூடத் தெரியாமல் தனது பொருள்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டு போன ஆபிரகாமுக்கு எவ்வளவு அதிகமாய் விசுவாசம் என்பதைக் பற்றி புரிந்துகொள்ள இது சிறிதளவு உதவுகிறது.

மற்றொரு முறை தேவன்: ஆபிரகாமை அழைத்து, ‘‘நீ உன் குமாரனை எனக்கு பலி கொடு’’ என்று கூறினார். ஆபிரகாம் உடனே பலி செலுத்தம்படி தேவன் சொன்ன இடத்திற்கு மகனை அழைத்துச் சென்று பலியிடும் நேரத்தில் தேவன் அதைத் தடுத்து நிறுத்தினார். இதை நீங்கள் ஆதியாகமம 22-ம் அதிகாரத்தில் படிக்கலாம். தேவன் சொன்னதால் ஆபிகராம் இதைச் செய்தார். இது உள்ளத்தைத் தொடும் ஒரு சம்பவம்.

## ஆபிரகாம் யூதர்களனைவருக்கும் தந்தை

விசுவாசத்தினிமித்தம் தேவன் ஆபிகாமையும், அவருடைய சந்ததியையும் தேர்ந்தெடுத்து கிறிஸ்துவை அவர்கள் வம்சத்திலே பிறக்கச் செய்தார். தேவன் ஆபிரகாமைப் பார்த்து, ‘‘பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உன் சந்ததிக்குள் ஆசீர்வதிக்கப்படும்’’ என்றார் (ஆதி 22:18). கிறிஸ்துவே அந்த சந்ததி என்பதை கலாத்தியர் 3:16 விளக்குகிறது. எல்லா தேசத்தாருக்கும் ஆசீர்வாதத்தை அளிக்க ஒருநாளில் கிறிஸ்து பிறப்பார் என்பதுதான் அந்த வாக்குத்தத்தம்.

## ஈசாக்கு வாக்குத்தத்தத்தின் மகன்

ஆபிரகாமுக்கு பல பிள்ளைகள் பிறந்தனர் (ஆதி. 25:2,12,19). ஆனால் வாக்குத்தத்தம் ஈசாக்கின் மூலமாகத்தான் வரவேண்டியிருந்நது. ஆபிரகாம் முதிர்வயதுள்ளவனாயிருந்த போது ஈசாக்கு பிறந்நதான் (ஆதி 21:2). ஈசாக்கு பெரியவனானபோது ‘‘உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசிர்வதிக்கப்படும்.’’ என்றார் (ஆதி 26:4) ஈசாக்கின் மூலமாக இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வரவேண்டியவராயிருந்தார்.

## யாக்கோபுவிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம்

தேவன் ஈசாக்கின் குமாரனாகிய யாக்கோபினிடம் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் கொடுத்த வாக்குத்தத்தத்தையே திரும்பக் கொடுத்தார். (ஆதி 28:14). யாக்கோபின் வாழ்க்கையைப் பற்றி (ஆதி 25:14) ல் படிக்கிறோம். அவர் எப்படி தன் தந்தையை ஏமாற்றினார் என்பதை ஆதியாகமம் 27-ல் படிக்கிறோம். அவர் தனது சகோதரன் தன்னை கொலை செய்துவிடாதபடி தப்பி ஓடினதையும், தனது மனைவிகளுக்காக 14 வருடங்கள் வேலை செய்ததையும் நாம் படிக்கின்றோம்.

## இஸ்ரவேல் தேசம்

தேவன் ஈசாக்கின் குமாரனாகிய யாக்கோபைத் தேர்தெடுத்து அவருடைய பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார். அவருடைய பன்னிரண்டு குமாரர்களும் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களின் தலைவர்களானார்கள்.

பழைய ஏற்பாட்டு சரித்திரத்தின் பெரும்பகுதி யாக்கோபின் சந்ததியாராகிய இஸ்ரவேல் மக்களுக்கும், தேவனுக்குமிடையே நடந்த சம்பவங்களைப் பற்றிக் கூறுவதாகும்.

இப்பொழுது பதில்களை நிரப்புங்கள். பதில்தாளை மட்டும் தனியே கிழித்து எடுத்து 3 ரூபாய் கவரில் வைத்து இன்றே எங்கள் முகவரிக்கு அனுப்பவும். நன்றி